செ.வெ.எண்: 22 நாள்:07.09.2021

## நாமக்கல் மாவட்டம்

## நியாய விலைக்கடைகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப அவர்கள் திடீர் ஆய்வு!

## குறைபாடுகள் கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை !!

-----

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், பொம்மம்பட்டி நியாய விலை கடை மற்றும் நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், காதப்பள்ளி நியாய விலை கடை ஆகிய நியாய விலை கடைகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.09.2021) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், காதப்பள்ளி நியாய விலை கடை மற்றும் எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், பொம்மம்பட்டி நியாய விலை கடைகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொருட்களின் இருப்பு, விற்பனை செய்யப்பட்டது போக மீதமுள்ள இருப்பினை சரிபார்த்து, பொருட்கள் வாங்க வந்தவர்களிடம் கடைகள் சரியான நேரத்தில் திறக்கப்படுகிறதா என்றும், பொது விநியோக பொருட்கள் அனைத்தும் கிடைகிறதா என்றும், அலைக்கழிக்கப்படுகிறீர்களா என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்.

பின்னர், விற்பனையான பொருட்களின் தொகை விபரங்களை அதிநவீன விற்பனை முனைய கருவியினை (பாயிண்ட் சேல்ஸ் மிசின்) இயக்கி அதனடிப்படையில் அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில் உள்ளிட்ட பொருட்களின் இருப்பு குறித்து பார்வையிட்டு சரிபார்த்தார்.

இந்த ஆய்வின்போது விற்பனை செய்யப்பட்ட அனைத்து பொருட்களின் விற்பனை குறித்து, விற்பனை முனைய கருவியில் (பாயிண்ட் சேல்ஸ் மிசின்) பதிவுகள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்றும் சரிபார்த்தார்.

மேலும், நியாய விலை கடையில் உள்ள குடோனில் இருப்பு வைக்கப்பட்டுள்ள அரிசி, சர்க்கரை, பருப்பு மூட்டைகளை நேரில் பார்வையிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.